1978 மார்ச் 27]

திரு. சி. ஆறுமுகம் : நீண்ட தூரம் ஓடுகின்ற பஸ் டிரைவர் களுக்கு அதுவும் குறிப்பாக டீசல் வண்டிகளாக இருப்பதால் சூடு அதிகமாகி கால்கள் கறுத்துவிடுகின்றன. அவர்களுடைய நலன் கருதி அங்கு ஃபான் வைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

வேலூர்-திருச்சிராப்பள்ளி பேருந்துப்பணி.

*679 வினா—**திரு. துரை முத்துசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர்-திருச்சிராப்பள்ளி வழி மூங்கில்துறைப்பட்டு ஆகிய மார்க்கங்களில் தொலைதூர விரைவு வண்டி அல்லது எல். எஸ். எஸ். வண்டி விடும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. துரை முத்துசாமி : ஏதாவது புதிதாக ஒரு தடம் போக்குவரத்துத் துறையில்விட வேண்டுமென்று சொன்னால் ஆய்வு செய்ய வாய்ப்பில்லை என்ற பதிலைத்தான் தந்து கொண்டிருக்கிறார்கள்—அமைச்சராக இருந்தாலும், அதிகாரி களாக இருந்தாலும், எந்த விதத்தில், எங்கு எப்படி ஆய்வு செய்கிறார்கள்? அதிகாரிகள் அங்கு வரும்போது சட்டமன்ற உறுப்பினர்கள், அங்குள்ள முக்கியஸ்தர்களோடு கலந்து ஆலோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூருக்கும் திருச்சிக்கும் இடையே பெரம்பலூர், உளுந்தூர் பேட்டை, மடப்பட்டு, திருக்கோயிலூர், திருவண்ணாமலை, போளூர் வழியாக தினசரி இரண்டு விரைவுப் பேருந்துகள் நான்கு தடவைகள் சென்று வருகின்றன.

[1978 மார்ச் 27

திருச்சிக்கும் திருவண்ணாமலைக்கும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினரால் இரண்டு மாவட்டப் பேருந்துகள் ஓட்டப்பட்டு வருகின்றன. இத்தடம் பெரம்பலூர், தொழுதூர், வேப்பூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், மூங்கில்துறைப்பட்டு வழியாக இயக்கப்படுகிறது.

திருவண்ணாமலைக்கும், வேலூருக்கும் போளூர் வழியாக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகமும், தனியார் பேருந்துகளும் போதுமான அளவு இயங்கி வருகின்றன. இந்நிலையில் திருச்சிக்கும் வேலூருக்கும் மூங்கில்துறைப்பட்டு வழியாக விரைவுப் பேருந்துகள் இயக்க வேண்டிய சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: ஆய்வு செய்கிறோம் என்று சொல்லுகிறார்களே, எங்கு எப்படி ஆய்வு செய்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: போக்குவரத்துக் கழகங்களில் ஆய்வு செய்வதற்காக டிராபிக் எஞ்சினியரிங் செல் என்ற பிரிவு இருக்கிறது. 'ஆக்குபன்சி ரேஷியோ' என்பதை அனுசரித்து அதன் அடிப்படையில் முடிவு எடுக்கப்படுகிறது.

அரூரிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

* 680 வினா—**திரு. எம். அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூரிலிருந்து பெங்களூருக்கும், சென்னைக்கும் விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. எம். அண்ணாமலை: அரூர், ஊத்தங்கரை ஆகிய இரண்டு வட்டப் பகுதிகளும் ரயில் போக்குவரத்தற்ற பகுதியாகும். அங்குள்ள பெரும்பான்மையான சிறு வியாபாரிகள் சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களுக்குச் சென்று வியாபாரம் செய்வதில் பெரும் சிரமம் இருக்கிறது. ஆகவே, சென்னையிலிருந்தும் பெங்களூரில் இருந்தும் அரூர் வழியாகப் பேருந்து விட்டால் நல்ல வசூல் ஆவதோடு அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் அபிலாஷையையும் பூர்த்தி செய்ததாக இருக்கும். இதை அரசு பரிசீலிக்குமா?